சுற்றறிக்கை இல :- 04/2005

**NEP/CO/GEN/02**

**06.10.2005**

சகல பலநோக்கு/ப.நே.வள/இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்களுக்கும்,
சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

## வெளிநாட்டு புலமைப்பரிசில் மற்றும் கல்விச் சுற்றுலா

கூட்டுறவுச் சங்கங்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில் காரணமாக அல்லது கல்விச் சுற்றுலா காரணமாக சங்கத்தின் பயிற்சி நிதியினை பயன்படுத்துதலாகாது.

இந்நடவடிக்கைகளுக்கென நிதி ஒதுக்கீடுகள் முன்கூட்டியே மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்நிதி ஒதுக்கீடானது அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றின் சேமிப்புக் கணக்கில் சங்கத்தின் பெயரில் இருத்தல் வேண்டும்.

உரிய புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பம் கோரிய திகதியில் உள்ள மேற்படி கணக்கின் மீதியே செலவு செய்யக் கூடிய தொகையாக கணிக்கப்படும் கல்விச் சுற்றுலாவிற்கும் இந்நடைமுறை பொருந்தும்.

வெளிநாட்டு புலமைப் பரிசிலுக்கான அங்கீகாரம் கோரி எனக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

1. அங்கீகாரம் கோரும் சங்கத்தின் விண்ணப்பம்.
2. விண்ணப்பதாரியின் விண்ணப்பம்.
3. இயக்குனர் சபைத் தீர்மானப் பிரதி.
4. விண்ணப்பம் கோரிய அறிவித்தல் நிழல்பிரதி.
5. முன் கூறப்பட்ட சேமிப்புக் கணக்கின் (பாஸ் புத்தகம்) நிழல் பிரதி. (மீதி தெளிவாக இருத்தல் வேண்டும்)

தொடர் இல. 3, 5 கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் உறுதி செய்தல் வேண்டும்.

தொடர் இல.1 கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிபாரிசு செய்திருத்தல் வேண்டும்.

இயக்குனர் சபைத் தீர்மானம் பின்வரும் விபரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

1. விடுவிக்கும் அலுவலர்/பணியாளர் பெயரும் பதவியும்.
2. பிரயாணத்திற்கான செலவுத் தொகை.
3. ஏனைய செலவுத்தொகை (வெளிநாட்டில் செலவிடும் நாள் ஒன்றிற்கு ரூ.2500/-ற்கு மேற்படாத தொகை)
4. நிதி ஏற்பாட்டுக் கணக்கின் மீதி.
5. தீர்மானம் முறையானதும் பூரணமானதுமாக இருத்தல் வேண்டும்.

இயக்குனர், தலைவர் ஆயின் சங்கத்தின் விண்ணப்பத்தில் உரிய அலுவலரின் எஞ்சியுள்ள சேவைக்காலம் குறிப்பிடப்படல் வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து திரும்பிய பின் 15 நாட்களில் புலமைப் பரிசில் பெற்றவர் விரிவான அறிக்கை ஒன்றினை எனக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிக்கையானது தான் கற்றறிந்த, பார்வையிட்ட, கேட்டறிந்த விடயங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் இவ்வனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தனது சங்கத்தினால் நடைமுறைப்படுத்தக் கூடிய வேலைத்திட்டம் பற்றிய விபரமும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பயிற்சிநெறி தொடர்பான சுருக்க அறிக்கை உடனடியாக இயக்குனர் சபைக்குச் சமர்ப்பித்து அதன்பிரதி உ. ஆணையாளருடாக எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். எனது முன் அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் செலவுகள் கணக்காய்வின் போது கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 44(6)ம் பிரிவின் கீழ் தண்டக் கட்டணமாக உரியவர்களிடமிருந்து அறவிடப்படும்.

ஐ. சுப்பிரமணியசர்மா,
பதில் கூ.அ.ஆணையாளரும்,
பதிவாளரும்.(வ.கி.மா)

பிரதி : 1. செயலாளர்,
பொதுநிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சு, வகிமா - தகவலுக்காக